DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

Calendar ...

Miscellaneous ...

Preliminary Register ... Case No: C.C. No. 23/2019

Session ...

Prosecution / PW-6

Deposition of Witness for ... Defence / Court

---

Name : திரு.தங்கவேல்

Father's Name (or)

Husband Name : த/பெ.ராமு

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

(Accused absent. u/s 355 BNSS petition filed and allowed)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 11.11.2025

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கொடிபங்கு கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். மலர்விழி எனது பெரியப்பா மகனின்மனைவி ஆவார். அவருக்கு சொந்தமான செயின் திருடுபோனது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு போலிசார் அந்த செயினை Recovery செய்து 14.05.2019 தேதி என்னை காவல் நிலையத்திற்கு அழைத்து இருந்தார்கள்.அங்கு பசிர் அலி என்பவரை விசாரித்து கொண்டிருந்தார்கள்.

2.பசிர்அலி என்பவரிடமிருந்து ஒரு புல்லட் வாகனம், செயின் ஒன்று தங்ககட்டி ஒன்று மற்றும் பணம் கைப்பற்றி இருப்பதாக கூறி Statement எழுதி என்னிடம் சாட்சிகையொப்பம் போட சொன்னார்கள். நானும் போட்டுகொடுத்தேன். என்னுடன் முத்து என்பவரும் சாட்சி கையொப்பம் போட்டு கொடுத்தார்.

3.கைப்பற்றப்பட்ட சொத்துகளை கைப்பற்றும் போது தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசரிலும் நான் சாட்சி கையொப்பம் போட்டு கொடுத்தேன். **என்னிடம் காட்டப்படும்ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.4 ஆகும். கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நகை, பணம், தங்ககட்டி பைக் முதலியவற்றை போலிசார் எங்கு வைத்து கைப்பற்றியதாக என்னிடம் காட்டினார்கள் என்றால் காவல்நிலையத்தில் வைத்து காட்டினார்கள். எதிரி பசிர்அலியுடன் நான் பேசினேனா என்றால் இல்லை. அவரும் என்னிடம் பேசவில்லை. வழக்கு சம்மந்தமான விசாரணைக்கு நான் காவ்ல நிலையத்தை தவிர வேறு எங்கும் செல்லவில்லை என்றால் சரிதான்.இவ்வழக்கு சம்மந்தமாக எத்தணை ஆவணங்களில் கையொப்பம் இட்டேன் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. இவ்வழக்கின் புகார்தாரர் மலர்விழி எனது அண்ணன் மனைவி என்பதாலும் அதனால் போலிசார் என்னை சாட்சியாக இருக்கும் படி கேட்டுகொண்டதால் நான் சாட்சி கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான்.

2.எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட நகை, பணம் தங்ககட்டி பைக் முதலானவை எங்கு வைத்து எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பம் இட்ட ஆவணங்களில் என்னுடன் வேறு யார் கையொப்பம் இட்டார் என்றால் முத்து என்பவர் கையொப்பம் இட்டார். வேறு யாரும் கையொப்பம் இடவில்லை.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.